Regeistered as a Newspaper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 22 (07-11 93) ஞாயிற்றுக்கிழமை ஓசை 262

...யாழ்ப்பாணம்

## வினாத்தாள் வராமையால் பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

கூட்டுறவுப் பரிசோதகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் உரிய நேரத்திற்கு வந்து சேராததால் யாழ்ப்பாணத்தில் இதற்கான பரீட்சை நேற்று நடைபெறவில்லை. பரீட்சார்த்திகள் அனைவரும் பிற்பகல் 4-00 மணி வரைக்கும் பரீட்சை மண்டபத்தில் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பினர். அத்துடன் உரிய காலத்திற்கு முன்பாக இதற்கான விண்ணப்பங்களை அனுப்பிய சுமார் 700 விண்ணப்பதாரிகளின் பெருமளவினருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படவில்லை. அவர்களும் மேற்படி பரீட்சார்த்திகளுடன் பரீட்சை மண்டபத்தில் வினாத்தாளுடன் அனுமதி அட்டைகளும் அனுப்பப்படலாம் என எண்ணி காத்திருந்தனர். உதவிக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதம் அவர்கள் வேறொரு தினத்தில் மேற்படி பரீட்சை நடைபெறும் என பரீட்சார்த்திகளிற்கு தெரிவித்துள்ளார். (88)

# யுத்த முனையில் ஏற்பட்டுள்ள மந்தம் புதிய தாக்குதலுக்கான கால அவகாசம்!

## ராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**"யுத்தத்தில் காணப்படும் ஒய்வானது அடுத்த யுத்தத்திற்கு திட்டமிடுவதற்காகவே. சமாதானத்திற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக அல்ல. யுத்தம் சில நேரங்களில் ஒய்ந்திருக்கலாம் யுத்தம் ஒய்ந்திருப்பது என்பதன் அர்த்தம யுத்தம் முடிந்துவிட்டது என்பதல்ல" இவ்வாறு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா தெரிவித்துள்ளார்.**

திருக்கோணமலையில் இரண்டாவது கஜபாகு அணியின் பத்தாவது பிரிவின் விழா ஒன்றில் அணிநடையை ஏற்றுக் கொண்ட பின் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்துகூறுகையில்; "நாம் சமாதான காலத்தில் வாழவில்லை. யுத்த காலத்தில்வாழ்கிறோம். என்பதை மனதில் கொள்ளவேண்டும். இந்த யுத்தம் முடிந்துவிட்டது என எவரும் கருதக் கூடாது இந்த யுத்தத்தில் எவ்வாறாயினும் நாம் வெற்றி பெற்றே தீரவேண்டும். இது தான்எமதுஇலட்சியம். இருந்த போதும் யுத்தத்தை நீண்ட காலத்திற்கு நடத்திக் கொண்டிருக்க முடியாது. எனவே அடுத்தஆண்டு இராணு தினத்திற்கு முன் இதனை முடிவுக் குக் கொண்டுவர வேண்டும்.

"இந்த இலட்சியத்தை அடைய நீங்கள் அனைவரும் உறுதியுடன் போராட வேண்டும். இதுவரை காலமும்செயற்பட்டது போல் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்யவேண்டும் இதற்கு பௌத்த குருமாரின் ஆசியும் உண்டு" என்றார்.

இவ் வைபவத்தில் கிழக்குப் பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, திருக்கோணமலை மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் சிறில் பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி விஜேதுங்க மீது தொண்டமான் அதிருப்தி!

## பதவி துறக்கவும் தயாராம்

(கொழும்பு)

"இனப்பிரச்சினைக்கோ அல்லது தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாகவோ எந்த ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காதநிலையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க செயற்படுகிறார். இந் நிலையில் நான் அமைச்சர் பதவியில் இருப்பதில் எதுவித பயனும் இல்லை" என அமைச்சர் தொண்டமான் 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது பேட்டியில்; "இராணுவ நடவடிக்கைமூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவதும். இராணுவ பலத்தைக்கொண்டு துப்பாக்கி முனையில் கிழக்கில் தேர்தல்களை நடாத்த முற்படுவதும் எமக்கு வருத்தத்தைத் தருகிறது.

"பிரேமதாச, ஜே. ஆர். ஜெயவர்த்தன காலங்களில் நான் ஆட்சியாளருடன் ஒத்துழைத்து தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான பல கோரிக்கைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளேன். இன்றைய ஜனாதிபதி காலத்தில் எதுவும் நடைபெறுவதாக

(3ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகள் சமூகம்தரவும்

(யாழ்ப்பாணம்)

வாதுவ கப்பலிலும் ருகுணு கப்பலிலும் திருக்கோணமலைக்கும், கொழும்பிற்கும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட பிரயாணிகள் இன்று காலை 9. 00 மணிக்கு யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவில் தமது பெயர்களை உறுதி செய்யும் படியும் பருத்தித்துறை இறங்கு துறைக்கு பி ப 2. 00 மணிக்கு சமுகமளிக்கும் படியும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### யாழ்ப்பாணக் குடாநாடு மீதான

# ராணுவத்தின் நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டும்!

(கொழும்பு)

"யாழ்ப்பாணம் குறித்து ஆயுதப்படையினர் தற்பொழுது கொண்டிருக்கும் நிலைப்பாட்டை முழுமையாக மீளாய்வு செய்யவேண்டும். இந்த மீளாய்வை நாம் உடனடியா வும் அவசியமாகிவிட்டது" இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில் தற்போதைய எமது போக்கை தொடர்ந்... வித அர்த்தமும் இல்லை. குடாநாட்டின் மீதான தடைகளைத் தளர்த்தி கதவுகளை நன்கு திறந்து வைத்திருக்க வேண்டும். இதற்குப்பின்னர் விடுதலைப்புலிகளின் நிலைப்... வேன். அர்த்தமற்றதும்தேவையற்றதுமான இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு இது நிச்சயம் வழிசெய்யும தற்போது நாம் செல்லும் வழியில் தொடர்ந்தும் செல்வதில் எதுவித

# தெரிவுக்குழு அறிக்கை செவ்வாய் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண என அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையினை வரும 9ஆம் திகதி... வுக்கு அவர் வழங்கிய செய்தியில் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் "இரண்டு ஆண்டுகளாக கூடிய இத் தெரிவுக்குழு... பொருத்தமான திட்டத்தை எந்த அளவிற்குமுன்வைத்துள்ளனர் என்பது கேள்விக்குரியதே.

வடக்கு - கிழக்கு இணைந்த...

றுக் கொண்ட பின் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் ஆங்கு தொடர்ந்துகூறுகையில்; ''நாம் சமாதான

விட்டது என எவரும் கருதக்கூடாது இந்த யுத்தத்தில் எவ்வாறாயினும் நாம் வெற்றி பெற்றே தீரவேண்டும். இது தான்எமதுஇலட்சியம்.இருந்த

த்திற்கு முன் இதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

''இந்த இலட்சியத்தை அடைய நீங்கள் அனைவரும் உறுதியுடன் போராட வேண்

ஆசியும் உண்டு" என்றார்.

இவ் வைபவத்தில் கிழக்குப் பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, திருக்கோணமலை மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் சிறில்பீரில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### யாழ்ப்பாணக் குடாநாடு மீதான

# ராணுவத்தின் நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டும்!

(கொழும்பு)

''யாழ்ப்பாணம் குறித்து ஆயுதப்படையினர் தற்பொழுது கொண்டிருக்கும் நிலைப்பாட்டை முழுமையாக மீளாய்வு செய்யவேண்டும். இந்த மீளாய்வை நாம் உடனடியாகவே செய்யவேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது'' இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில் தற்போதைய எமது போக்கை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதில் எந்த வித அர்த்தமும் இல்லை. குடாநாட்டின் மீதான தடைகளைத் தளர்த்தி கதவுகளை நன்கு திறந்து வைத்திருக்க வேண்டும். இதற்குப்பின்னர் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை நாம் அறிந்து கொள்ளலாம். இதன்மூலம் குடாநாட்டின் மீது அடிக்கடி நாம் தாக்குதல் நடாத்தவேண்டிய அவசியம் ஏற்படாது என்று நான் திட்டவட்டமாகக் கூறுவேன். அர்த்தமற்றதும்தேவையற்றதுமான இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு இது நிச்சயம் வழிசெய்யும தற்போது நாம் செல்லும் வழியில் தொடர்ந்தும் செல்வதில் எதுவித அர்த்தமும் இல்லை. எனது இந்தக் கருத்தையே இராணுவத்தில் உள்ள பல சிரேஷ்ட அதிகாரிகளும் கொண்டிருக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வடக்கு கிழக்கு கடலில்

## மீன்பிடிப்பதற்கான தடை; விலக்குவதுபற்றி ஆராய்வு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடி நீர்வள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிறிலங்கா பாதுகாப்புப் படையினர், பொலிசாருடன் இணைந்து பாதுகாப்பு தொடர்பான சில முடிவுகள் எடுக்கப்படவேண்டியுள்ளதாகவும் அம் முடிவுகள் எடுக்கப்பட்டபின் தடையை நீக்குவது குறித்து அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத் தடைநீக்கம் குறித்து பரீட்சார்த்த நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும். பின்னர் இவை ஏனைய பகுதிகளிலும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### சமசமாஜக் கட்சியின்

## தலைவர் சொய்சாவிற்கு கொலை மிரட்டல்!

(கொழும்பு)

யாழ்தேவி நடவடிக்கைக்கு எதிராக அறிக்கை வெளியிட்டமைக்காக அவருக்கு மரணதண்டனை வழங்கப்படவுள்ளதாக மேல்மாகாண சபை அமைச்சரும் சமசமாஜக் கட்சி தலைவருமாகிய பேர்ணாட் சொய்சாவுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடப்பட்டுள்ளது.

ஒருமாத காலத்திற்குள் சமசமாஜக் கட்சியின் அனைத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கையில் கைதான 500 தமிழர் பற்றி தகவலில்லை!

## காணாமற் போனவர் சங்கத் தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றாடலிலும் தோட்டப் பகுதிகளிலும் கைதான 500 இளைஞர் யுவதிகள் பற்றிய தகவல்கள் இன்றுவரை வெளியிடப்படவில்லை. அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? எப்படியிருக்கிறார்கள் என்பது பற்றி அவர்களது பெற்றோர்களுக்குக் கூட அறிவிக்கப்படவில்லை என காணாமல் போன பிள்ளைகளின் பெற்றோர் சங்கத் தலைவர் விஜயதாச பத்திரான தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் இப் பகுதிகளில் பொலிஸ், இராணுவம் மற்றும் சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களினால் 2000க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டிருந்தனர்

இவ் இளைஞர் யுவதிகளில் பலர் இனம்தெரியாத குழுக்களால் மூகத்துவாரம், தெகியத்தகந்திய, வவுனியா போன்ற பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

இதற்கிடையில் கைதுசெய்யப்படுபவர்கள் பற்றிய விபரங்கள் அனைத்தும் உடனடியாக குற்றப்புலன் விசார

(3ஆம் பக்கம் பார்க்க)

## இரு கல்வி வலயங்களாக யாழ். மாவட்டம் பிரிப்பு

### கல்விப்பணிப்பாளர்களும் நியமனம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இரண்டு கல்வி வலயங்கள் செயற்படவுள்ளன.

இதற்கமைய யாழ். மாவட்டமானது யாழ்ப்பாணம், வடமராட்சி என இரண்டு கல்வி வலயங்களாக செயற்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கென இரண்டு கல்விப்பணிப்பாளர்கள் வடகிழக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட்

[3ஆம் பக்கம் பார்க்க]

தமிழீழத்தை விற்றவர் வரிசையில்
உன்பெயர் இருக்கக்கூடாது
தமிழீழத்தைப் பெற்றவர் வரிசையில்
உன்பெயர் இருக்கட்டும்.

## கருத்தரங்கு

சித்திர, சங்கீத, நடன பயிலுனர் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 09 ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

சித்திர ஆசிரியர்களுக்கான

(3ஆம் பக்கம் பார்க்க)

டர்பாகவோ எந்த ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காதநிலையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க செயற்படுகிறார். இந் நிலையில் நான் அமைச்சர் பதவியில் இருப்பதில் எதுவித பயனும் இல்லை'' என அமைச்சர் தொண்டமான் 'இந்து' பத்

மேலும் அவர் தனது பேட்டியில்; 'இராணுவ நடவடிக்கைமூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவதும். இராணுவ பலத்தைக்கொண்டு துப்பாக்கி முனையில் கிழக்கில் தேர்தல்களை நடாத்த முற்படுவதும் எமக்கு வருத்தத்தைத் தருகி

ஜெயவர்த்தன காலங்களில் நான் ஆட்சியாளருடன் ஒத்துழைத்து தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான பல கோரிக்கைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளேன். இன்றைய ஜனாதிபதி காலத்தில் எதுவும் நடைபெறுவதாக

(3ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழு அறிக்கை செவ்வாய் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண என அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையினை வரும 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக 'திவயின' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த தயாலங்காபுர தெரிவித்துள்ளார். பீ.பி.ஸியின் சிங்கள சேவையாகிய 'சந்தேசிய'வுக்கு அவர் வழங்கிய செய்தியில் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் ''இரண்டு ஆண்டுகளாக கூடிய இத் தெரிவுக்குழுவிலிருந்து தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒரேகாரணத்தை முன்வைத்து வெளியேறி விட்டன. இந் நிலையில் தெரிவுக் குழுவில் இருந்த சிங்களக் கடசிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான திட்டத்தை எந்த அளவிற்குமுன்வைத்துள்ளனர் என்பது கேள்விக்குரியதே.

வடக்கு - கிழக்கு இணைந்த தீர்வே தேவையென தமிழ்க் குழுக்கள் அனைத்தும் ஒரே குரலில் கூறிவிட்டன. இதற்கு குறைந்த எதையும் ஏற்றுக் கொள்ள அவை தயாராக இல்லை. ஆனால் இதனை நிறை

(3ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகள் குறித்து ஆராய ஐ. நாவின் விசேட குழு

## 10ஆம் திகதி கொழும்பு வருகிறது

(கொழும்பு)

வட-கிழக்குப்பகுதிகளில் உள்ள அகதிகளின் நிலை குறித்து அராய ஐக்கிய நாடுகள் சபையின் விசேட குழு ஒன்று மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் நலன்களைககாக்கும் விசேட பிரதிநிதியாகிய கலாநிதி பிரான்சிஸ் டிவ் என்பவர் தலைமையில் இக்குழு எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக் குழுவினர் கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், திருக்கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்ய உள்ளனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களின் நலன்களைக கவனிப்பதற்காக கடந்தஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி அதிகாரிகளைக் கொண்ட இக்குழுவினர் ஆசியாவில் இலங்கைக்கே முதற்தடவையாக விஜயம் செய்ய உள்ளனர் என்பது குறிடபிடத்தக்கது.

# ஜனநாயக உரிமைகளில் ராணுவ தலையீடு அதிகரிப்பு

## சமசமாஜக்கட்சி பொதுச்செயலாளர்

சிறிலங்கா மக்களின் ஜனநாயக உரிமைகளில் இராணுவத் தளபதிகள் தலையீடு செய்வது தற்பொழுது அதிகரித்துள்ளதாகவும், வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் பெரும் பொருள் லாபம் அடையும் சில இராணுவ உயர் அதிகாரிகள் இத் தேசிய பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதை விரும்பவில்லை என்றும் சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பெற்றி வீரக்கோன் தெரிவித்தார்.

''கருத்துகளைச் சுதந்திரமாக வெளியிடும் உரிமையைப் பறிப்பதற்கு இராணுவத் தலைமைப்பீடம் முயற்சி செய்து வருகிறது யுத்தத்தை வியாபாரமாக்கி தமக்கு கீழுள்ள சிப்பாய்களையும் அதிகாரிகளையும் பலியிடும் நடவடிக்கையிலேயே இராணுவத்தின் உயர் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களே தேசியப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வைக் காண்பதற்கு தடங்கலாகவும் உள்ளனர்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

''இந்தயுத்தத்தை தொடர்ந்துகொண்டு செல்ல இராணுவத்தில் ஒரு பிரிவினர் விரும்பவில்லை ஏனெனில் இவ் யுத்தத்தில் பலியாவது கனிஷ்ட அதிகாரிகளும் சிப்பாய்களும் மட்டுமே இராணுவ உயர் அதிகாரிகள் அல்ல என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

''யுத்தகளத்தில் போரிடும் படையினருக்கு வழங்கபபடும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆண்டு 9 கணக்கியல்

கனிட்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான பயிற்சி நூல் குறுவினா விடை கணக்கியல் பயிற்சிக் கணக்குகள். கடந்த கால (1992) வினா விடைகள். ஆக்கம் த. தர்மராஜன். (சி/ 7844)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6490)

### "ராம் வீடியோ சென்ரர்"

உடனுக்கு உடன் வெளி வரும் புதிய திரைப்படப்பிரதிகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள ராம் வீடியோ சென்ரர் இல 27/1 மணிக்கூட்டு வீதி, B M.C லேன் எழிலகம் அருகாமை யாழ்ப்பாணம். (6510)

### விற்பனைக்குண்டு

15 மாதம் நிரம்பிய பொமனேரியன் பெண் நாய்(5மாதம்) ஆண் குட்டியும் விற்பனைக் குண்டு. தொடர்பு;கே. மகேந்திரன், 53 இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6512)

### பசுமாடு இல. 20

எமது பண்ணையில் உள்ள பசுமாடு கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாங்குவோர் 12-11-93ம் திகதிக்கு முன் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி-7868)

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷசன் நாய்க்குட்டிகள் (42 நாட்கள்) விற்பனைக்குண்டு- தொடர்பு; இலக்கம். 15. சீனியர் ஒழுங்கை கலட்டி, யாழ்ப்பாணம். (6485)

### "Wild" Survey Instrument - For Sale

Theo Dolite and Level Contact:-P. Nadeswaran No. 51, Kandy Road, Chundikuli (In Front of oldpark) or A Sivaguru, Church Road, Chavakachcheri. (6514)

## பிரேமதாசவின் சொத்துக்களை நிர்வகிக்க ஹேமா

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசவின் உயில் எழுதிவைக்காத சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமையை கொழும்பு மாவட்ட நீதிபதி, திருமதி ஹேமா பிரேமதாசவிற்கு வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு எவரிடமிருந்தும் ஆட்சேபம் வராததையடுத்தே சொத்தை ஹேமாவிற்கு வழங்க உத்தரவிடப்பட்டது.

### நிவாரணப் பொருள்கள் விநியோகம்

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய அக்ரோபர் மாத முதல் இரண்டு வார இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்கள் தற்போது சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன.

### உதைபந்தாட்டம்

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் நடாத்தப்படும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 3. 00 மணிக்கு நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடைபெறுகின்றது. இப்போட்டியில் கலைவாணி எதிர் சென் அன்ரனிஸ், சென் மேரிஸ் எதிர் அரியாலையும் விளையாடுகின்றன.

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் மலராக 29-12-1974

தாயக மடியில் விதையாக 7-11-1990

### வீரவேங்கை மது
[வடிவேலு ஆனந்தசிவம்]

தச்சன் காடமைந்த எதிரிமுகாம் செருக்கடக்க
தனயன்நீ சென்றியிலே நின்றுனது உயிரீந்தாய்!
அச்சமற்ற புலியேயுன் அடிதொடர்ந்து போராட்டம்
அகிலமெலாம் வியந்துநிற்க பரிணமித்துத் தொடர்கிறது

★ ★ ★

வெல்லும் புலி வெல்லும் வேதனைகள் அகன்றோடும்
வேங்கை உன்கனவு நனவாகிக் கனிந்துவரும்
அஞ்சலித்தோம் மகனே உன் அடியொற்றி நாம் தொடர்வோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தவர்

மீசாலை வடக்கு,
[வேம்பிராய்]
மீசாலை.

(6454)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## முக்கிய அறிவித்தல்

வடபிராந்தியத்தில் வாழும் எமது அனைத்து தொழிலாளர், நிலைய உரிமையாளர்கள், கிராமியத் தொழிலாளர்கள் சகலரும் எதிர்வரும் 20-11-93ற்கு முன்னர் சமாசத்தின் 'உறுப்பினர் சான்றுப்பத்திரத்தை' ரூபா 10/- செலுத்திப் பெற்றுபடிவத்தை நிரப்பி ஒப்படைத்து தங்கள், 'உறுப்புரிமையை' உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:

[அ] இப்படிவத்தை நிரப்பி ஒப்படைக்காதவர்கள் எவருக்கும் 'நிலையம் நடாத்தவோ' நிலையங்களில் தொழில் புரியவோ அனுமதி மறுக்கப்படும்.

[ஆ] நிலைய உரிமையாளர்கள் தாம் அமர்த்தும் தொழிலாளர்களிடம் 'உறுப்பினர்' சான்றுப் பத்திரம் நிரப்பி ஒப்படைத்ததற்கான 'சான்றிதழ் அட்டை' இருப்பதை உறுதிப்படுத்தியபின்பே அமர்த்தவேண்டும்.

[இ] 'உறுப்பினர் சான்றுபத்திர' படிவம் அனைத்து கிளைச்சங்கங்களிடமும், சமாச அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

சூசை எட்வேட் ச. அன்ரன் இராசநாயகம் மு குமாரசாமி
தலைவர். செயலாளர். பொருளாளர்.

18, A இராசா ன்தோட்டலேன், யாழ்ப்பாணம்.

(6482)

மாபெரும் கைப்பணிக் கண்காட்சியும்

## மலிவு விற்பனையும்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் அமைப்பின் கைவண்ணத்தில் உருவான பனைஓலை கைப்பணிப் பொருட்களும், அலங்காரவேலைப்பாடுகளுடனான தையற் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, மலிவு விலையில் விற்பனையும் செய்யப்படும்.

கண்காட்சி:- 06-11-93, 07-11-93 (சனி, ஞாயிறு)

மலிவு விற்பனை:- 07-11-93

இடம்:- சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்

நேரம்: மு. ப 1[illegible] மணி முதல் பி. ப 5-0[illegible] வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள்,
பனை. தெ வ. அ. கூ. சங்கம்.
சாவகச்சேரி.

(6499)

## 21-வது பிறந்தநாள் நினைவலைகள்

மலர்வு: 07 — 11 — [illegible]72



உதிர்வு: 17 — 12 — 1991

### செல்வி தர்சினி சர்வானந்தா
(உயர்தரவகுப்பு மாணவி யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி)

முல்லை மலராக
முகை யவிழ்த்து
மணம் கமழ்ந்த
நாளின்று
இருபத்தோராண்டு
இன்றோடு நிறைகிறது,
என் உயிரதுவும்
உடல் புகுந்து......
ஈராண்டாய்—ஏன்
இந்தச் சோகம்
உடல் பிரிந்த
உயிரதுவும் -நும்
உள்ளத்தில் தானம்மா

உன் சமையல்
மணம் கமழும்
மருத்துவம் செழிக்கும்
தந்தையின் கரங்களிலும்
தம்பி, தரணியிலே
தலைநிமிரும்
அறிவினிலும்
நானுறைவேன்
நீயறிக,
நீடுழி வாழ்கவென
நீ வாழ்த்து
என் தாயே.

ந. சர்வானந்தா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

அன்புடன்,
அப்பா, அம்மா, தம்பி

(6491)

நினைவு கூருகின்றோம் ...

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும்

## "3ஆவது" வதிவிட வேளாண்மைப் போட்டி

## பசுமாடு இல. 20

எமது பண்ணையில் உள்ள பசுமாடு கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாங்குவோர் 12-11-93ம் திகதிக்கு முன் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி-7868)

---

அகிலமெலாம் வியந்துநிற்க பரிணமித்துத் தொடர்கிறது

★ ★ ★

வெல்லும் புலி வெல்லும் வேதனைகள் அகன்றோடும்
வேங்கை உன்கனவு நனவாகிக் கனிந்துவரும்
அஞ்சலித்தோம் மகனே உன் அடியொற்றி நாம்
தொடர்வோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை வடக்கு,
[வேம்பிராய்]
மீசாலை.

குடும்பத்தவர்

(6454)

---

ந்து கிளைச்சங்கங்களிடமும், சமாச அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஜுசை எட்வேட் ச. அன்ரன் இராசநாயகம் மு குமாரசாமி
தலைவர். செயலாளர். பொருளாளர்

18, A இராசா ன்தோட்டலேன், யாழ்ப்பாணம்.

(6482)

---

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும்

# "3ஆவது" வதிவிட வேளாண்மைப் போட்டி

### 1993 - 1994 யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்குமுறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழிவகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993 / 94 காலப் பகுதியில் யாழ். குடாநாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபட வைக்கவும் வதிவிடவேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளை பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிக்கொள்கிறது.

#### போட்டிகளுக்கான நிபந்தனைகள்:-

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச் செய்கையைக் கவர்ச்சிகரமாக அமைத்தல்,

02. 10 அடி நீளம், 3 அடி அகலமும் ஆனபாத்திகளில் உள்நாட்டு மரக்கறி பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றாவோ, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரை போன்றவையும், மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களாக போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகை பயிர் இனங்களில் மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும், மேல்நாட்டு மரக்கறி வகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.

    அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

    சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. 10 அடி நீளமும், 3 அடி அகலமுமான பாத்திகளில் இலை வகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்குள் கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாதல் இருத்தல்வே ண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேற்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று (3) நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

05. பழ மரங்களான பப்பாசி, வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கூட்டெரு குழி முறையிலோ, குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

08. தேனீ வளர்த்தல்:-
    குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக்கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல்:-
    குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) கனகூழ முறையில் வளர்த்தல் வேண்டும்.

10. தாரா ஒருசோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்கு பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்க வேண்டும்;

11. பசுமாடு ஒன்று அல்லது மறி ஆடு ஒன்று வளர்க்கப்படல் வேண்டும் இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்குக் கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

12. முயல் குறைந்தது ஒருசோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்குத் தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள் முருங்கை, சீமைக்கிளுவை என்பன இருத்தல் வேண்டும்.

14. பதிவேடு பேணல்:-
    மரக்கறிப்பயிர் கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல் வேண்டும்.

#### குறிப்பு:

விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ் மாவட்ட செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்திக்குழு வட்ட தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்றுப் பூரணப்படுத்தி 15-11-93ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிகமாகத் தேவைப்படும் விபரங்களைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களிலும், கமநல சேவைத் திணைக்களங்களிலும், விவசாயப் போதனாசிரியர்களிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் 15 - 11 - 93 தொடக்கம் 15-12-93 வரையுள்ள காலப்பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

#### போட்டிகள் பார்வையிடும் காலம்:-

முதலாம் கட்டப் பார்வையிடுதல்
01-01-94 தொடக்கம் 20-01-94 வரையுள்ள காலப்பகுதி
இரண்டாம் கட்டப் பார்வையிடுதல்
01-02-94 தொடக்கம் 15-02-94 வரை
இறுதிக்கட்டப் பார்வையிடல்
02-02-94 தொடக்கம் 29 02-94 வரை

(சி-7858)

---

## செல்வி தர்சினி சர்வானந்தா

### (உயர்தரவகுப்பு மாணவி யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி)

முல்லை மலராக
முகை யவிழ்த்து
மணம் கமழ்ந்த
நாளின்று
இருபத்தோராண்டு
இன்றோடு நிறைகிறது,
என் உயிரதுவும்
உடல் புகுந்து......
ஈராண்டாய்—ஏன்
இந்தச் சோகம்
உடல் பிரிந்த
உயிரதுவும் -நும்
உள்ளத்தில் தானம்மா

உன் சமையல்
மணம் கமழும்
மருத்துவம் செழிக்கும் இ
தந்தையின் கரங்களிலும்
தம்பி, தரணியிலே
தலைநிமிரும்
அறிவினிலும்
நானுறைவேன்
நீயறிக,
நீடூழி வாழ்கவென
நீ வாழ்த்து
என் தாயே.

ந. சர்வானந்தா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

அன்புடன்,
அப்பா, அம்மா, தம்பி

(6491)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-11-07

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி, பரந்தன், உமையாள்புரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நிசாந்தன்** (— ராஜேந்திரன் - பரந்தன் - கிளிநொச்சி)

மட்டு-திருப்பழுகாமம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நெல்சன்** (சின்னத்துரை உதயகுமார்-சேனைக்குடியிருப்பு, கல்முனை-அம்பாறை)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த,

**அகிஸ்** (பரமலிங்கம் தவனேசன்-இடதுகரை, முத்தையன்கட்டு-முல்லைத்தீவு)

கிளி-பரந்தன், உமையாள்புரம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சத்தியன்** (பரமசாமி கிருபாகரன் – குமரபுரம், பரந்தன் -கிளிநொச்சி)

1987ஆம் ஆண்டு உரும்பராய் பகுதியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 07 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு திருமலை, மூதூர் 55-ம் கட்டைப் பகுதியில் இந்தியப்படையினரின் முன்னிலையில் தேச விரோதிகளினால் வெட்டிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**ரகு**

1989ஆம் ஆண்டு வில்பத்துக்காட்டுப்பகுதியில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத சமரில் வீரச்சாவெய்திய,

**ஆழ்வார்** (நாகராசா கனகசுந்தரம் செட்டிக்குளம்-வவுனியா)

**கப்டன் சத்தியராஜ்** (பார்போன் கிறிஸ்ரி-உயிலங்குளம்-மன்னார்)

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**மது** (வடிவேல் ஆனந்தசிவம்-மீசாலை வடக்கு-சாவகச்சேரி)

தமிழீழக்கடற்பரப்பில் (குறிகாட்டுவான்) தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை, செட்டியாவெளியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்டைபறிச்சானைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,

**தமிழீழ விடுதலைப் புலிகள்:**

(சி/7864)

நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்.

## சிந்தனைக்கு

மற்றவர்கள் கண்டுபிடிக்காமல் அவர்களை ஏமாற்றுவது எவ்வளவு கடினமோ, அந்த அளவு, தானே அறியாமல் தன்னை ஏமாற்றுவது எளிது.

— ரோஷ்புக்கோ

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## மாகாணசபைகள் ஒருவகை ஏமாற்று!

**1987** ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கை மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை அமைப்பானது. இனப்பிரச்சினை தீர்விற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என ஆரம்பத்தில் பிரசாரம் செய்யப்பட்டது இம்மாகாணசபைக்கு கிடைக்கும் அதிகாரங்கள் தமிழரின் ஆட்சி அதிகாரத்தை வடக்கு கிழக்கில் வலுப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது மாகாணசபை அமைப்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தமிழ் மக்களுக்குப் பெரும் துரோகம் இழைக்கின்றனர் எனவும் பிரகடனம் செய்யப்பட்டது

இருப்பினும், மாகாணசபை அமைப்பிற்கென விசேடமாக அதிகாரம் எவையும் வழங்கப்படவில்லை. மாகாணசபை அமைப்பு தமிழரின் தாயகத்தையோ அன்றி அவர்களின் உரிமைகளையோ பாதுகாக்கவில்லை எனக்கூறி அதை விடுதலைப்புலிகள் நிராகரித்தனர். ஆனால், புலிகளின் இந்நிலைப்பாட்டை ஒரு முன்யோசனை அற்ற முடிவு எனவும், கிடைக்கும் உரிமைகளை நழுவ விட்டு விட்டனர் எனவும் விமர்சனங்கள் செய்தவர்களும் உண்டு.

ஆனால், தென்னிலங்கையில் தற்பொழுது சில மாகாணசபைகளைக் கைப்பற்றியுள்ள எதிர்க்கட்சிகள் போடும் கூச்சலானது, மாகாணசபை அமைப்பானது எந்தளவிற்குப் பலவீனமானதாகவுள்ளன என்பதை அன்று புரிந்து கொள்ளத்தவறியவர்களுக்கும், புரிந்து கொள்ள மறுத்தவர்களுக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டாகும். அதாவது மாகாணசபைகளுக்கு எதுவித அதிகாரங்களும் இல்லை என்பதும், நிதிஒதுக்கீடென்பது மிகவும் குறைவானது என்பதும், அவற்றைப் பெற்றுக்கொள்ள எதிர்க்கட்சிகள் தற்பொழுது போராட்டம் நடத்தமுற்படுவதும் இதற்கான சான்றுகளாகும்.

எதிர்க்கட்சிகள் கூறுவது மட்டுமல்ல, அரசாங்கம்

## பாராளுமன்ற உறுப்பினரின் தொலைபேசி ஒற்றுக்கேட்பு

(கொழும்பு)

தமது தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்படுகிறது என்று அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்றஉறுப்பினரான மகிந்த ராஜபக்ஸா குற்றம் சாட்டியுள்ளார். அவர் இதுபற்றி மேலும் கூறுகையில், பாதுகாப்பு அமைச்சின் விசேட பிரிவொன்று முக்கிய பிரமுகர் ஒருவரின் உத்தரவுப்படியே இவ்வாறு தொலைபேசி உரையாடல் ஒற்றுக்கேட்கப்படுவது தொடர்வதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி டி. பி. விஜெதுங்காவிற்கு அவர் இது தொடர்பாக எழுதியுள்ள கடிதமொன்றில் தனிப்பட்ட மனிதர்கள்தமது அந்தரங்கவிடயங்களை பாதுகாக்கும் உரிமையைக்கூட அரசு மறுத்து வருவதையே இது காட்டுவதாகவும், தமது தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்பட்டு அரசியல் நோக்கங்களுக்காக அவை பயன்படுத்தப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## நினைவழியா நாட்கள் இன்று வெளியிடப்படும்

தமிழீழத்தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரையைத் தாங்கிவரும் 'நினைவழியா நாட்கள்'' என்னும் புதுவை இரத்தினதுரையின் கவிதைநூலைதமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர்திரு சு. ப. தமிழ்ச்செல்வன் இன்று வெளியிட்டு வைக்கவுள்ளார்.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ இளங்குமரன் அவர்கள்தலைமையில் இன்று பிற்பகல் நான்குமணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இவ் வெளியீட்டு விழாநடைபெறவுள்ளது. வண. பிதா பிரான்சிஸ் யோசப் அடிகளாரும், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் மங்கள விளக்கேற்றி வைக்கஇன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கத்தின் தமிழ் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகவுள்ளது. கலை பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் சேரலாதன் வரவேற்புரையையும் தமிழீழ கல்விக்கழகத்தை சேர்ந்த வே. பாலகுமாரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

பண்டிதர் வீ. பரந்தாமன், கவிஞர் சோ பத்மநாதன், 'பராசிரியர் அ சண்முகதாஸ் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின்மதிப்புரைகளைத் தொடர்ந்து நூலாசிரியரின் உரை இடம்பெறும். யாழ்ப்பாணமாவட்ட கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் இ. மஅன்பரசனின் நன்றியுரையைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக சங்கீதபூஷணம் என். வி. எம். நவரத்தினம் வர்ண ராமேஸ்வரன் ஆகியோர் பாடும் தமிழிசை அரங்கும் இடம்பெறும்.

### பிற்போடப்பட்டது

இன்றும் நாளையும் நடைபெறவிருந்த தொலைக்கல்வி செயன்முறைப் பரீட்சை அனைத்தும் 14/20-11-93-ல் ஞாயிறு, சனிக்கிழமைகளில் நடைபெறும் என தொலைக் கல்வி இணைப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்திரு துரையியாகராஜா தெரிவித்துள்ளார்.

# மலையகசிங்களவரைவிரட்ட தொண்டா முற்படுகின்றார்

## மாதுளுவாவே தேரர் குற்றச்சாட்டு

[கொழும்பு]

மலைநாட்டு சிங்கள மக்களை விரட்டியடிக்க தொண்டமான் முற்படுகின்றார். இதனை தடுத்து நிறுத்த நாம் முற்படும்போது எம்மை இனவாதிகள் என்று முத்திரை குத்துகிறார்கள் என்று மாதுளுவாவே சொசித தேரோ லக்திவ பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் தொண்டமான் இன்னும் கொஞ்ச நாட்கள் இப்படியே இருந்தால் இன்று மலைநாட்டில் ஏற்பட்ட நிலைமை சகல சிங்கள மக்களுக்கும் ஏற்படும். தற்போதைய ஜனாதிபதி மலைநாட்டை சேர்ந்தவர். அவருக்கு மலைநாட்டிலுள்ள பிரச்சினைகள் தெரியும்.

எனவே இன்று முதல் வேலையாக இதனைத் தீர்க்க வேண்டும்.

தொண்டமானின் வேண்டுகோளுக்கு இணங்க தோட்ட தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது இதனால் இன்று மலையகத்தில் சில பகுதிகளில் சிங்களவர் சிறுபான்மை ஆக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த நிலை தொடரக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## சர்வசன வாக்கெடுப்பை புலிகள் குழப்பதிட்டமாம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக கிழக்கில் சிறிலங்கா அரசாங்கம் நடாத்த திட்டமிட்டுவரும் சர்வசன வாக்கெடுப்பை சீர் குலைக்க புலிகள் ஆயத்தமாகி வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் இரு மாகாணங்களும் நிரந்தரமாக இணைப்பதா அல்லது தனித்தனிமாகாணங்களாக இருக்கவேண்டுமா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பை வரும் ஜனவரியில் நடாத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவது தெரிந்ததே

இவ்வாக்கெடுப்பு நடைபெறுவதை முறியடிக்க விடுதலைப் புலிகள் ஆயத்தமாகி வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் உயர் வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை விலக்கிக் கொள்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக மீன்பிடி நீர்வள அமைச்சர் தெரிவித்துள்ளார்

இதுதொடர்பாக சிறிலங்கா பாதுகாப்புப் படையினர், பொலிசாருடன் இணைந்து பாதுகாப்பு தொடர்பாக சில முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் இத்தடை நீக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சாதாரண தர பரீட்சையில் 5,38000பேர்தோற்றவுள்ளனர்

டிசம்பர் ஆறாம்திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த (சா/தர) பரீட்சைக்கு நாடு முழுவதும் சுமார் 3000இற்கும்மேற்பட்ட பரீட்சை நிலையங்களில் 5,38000 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் சுமார் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் பாடசாலைப் பரீட்சார்த்திகள் அடங்குகின்றனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் இம்மாத இறுதியில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (பா)

## கோரிக்கை

கொழும்பில் 27-11-1993 நடைபெறவிருக்கும் கணக்காய்வாளர் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு அனுமதி தரும்படி யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கோரியுள்ளார். (ஜி) (ச)

### கருத்தரங்கு

கருத்தரங்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நான்கு நாட்களும் சங்கீத ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். இந்துக்கல்லூரியில் மூன்று நாட்களும் நடன ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மூன்று நாட்களும் நடைபெறவுள்ளன.

அவ்வப்பாடத்திற்குரிய பயிலுனர் ஆசிரியர்கள் பயிற்சி நடைபெறும் நிலையத்திற்கு காலை 8.00 மணிக்கு சமுகமளிக்கும் படி கேட்கப்படுகின்றனர்.

தென்னிலங்கையில்
ணைத் தலைமைச் செயலகத்

## இன்றைய நிலைகுறித்து தமிழர் பெருமைப்படலாம்

- செல்லச்சாமி

தமிழரைக் கண்டு பொலிசும் இராணுவமும் இன்று ஓடுகின்றது. இதுகுறித்து நாம் பெருமைப்பட வேண்டும் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

முன்னர் இராணுவத்தையோ பொலிசாரையோ கண்டவுடன் தமிழர்கள் ஓட்டமெடுத்தனர். ஆனால் இன்று அந்த இராணுவமும் பொலிசாரும் ஒரு தமிழனை கண்டாலோ அவர் புலி என பீதி அடைகின்றனர். இது அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. இது பெரியதொரு விடயம் இதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழரின் உறுதியான ஆற்றல் அவர்களின் ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. அவ் வலிமை எம்மிடம் இருக்கும் வரை எந்த பலாத்காரத்திற்கோ அரசுக்கோ நாம் அஞ்ச வேண்டியதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி

### தமிழீழ பொதுக் கல்வித்தேர்வு

## விசேட பரீட்சைக்கான தேர்வு நிலைய மாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தோற்ற முடியாது போன அச்சுவேலி, புத்தூர், பளை, கொடிகாமம், வரணி உசன், சாவகச்சேரி, மட்டுவில் கொத்தணி பாடசாலை மாணவர்களுக்கு நாளை விசேட பரீட்சையில் தோற்ற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும், பாடசாலை ... பகுதி I, பகுதி II தோற்ற ... யம், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்திலும்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு அப்பாடசாலை மண்டபத்திலும்,

சாவகச்சேரி றிபேக்கல்லூரியில் தோற்றிய மாணவர்களுக்கு அப்பாடசாலை மண்டபத்திலும்,

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் அப்பாடசாலை மாணவர்களுக்கும்

சபை அமைப்பு தமிழரின் தாயகத்தையோ அன்றி அவர்களின் உரிமைகளையோ பாதுகாக்கவில்லை எனக்கூறி அதை விடுதலைப்புலிகள் நிராகரித்தனர். ஆனால், புலிகளின் இந்நிலைப்பாட்டை ஒரு முன்யோசனை அற்ற முடிவு எனவும், கிடைக்கும் உரிமைகளை நழுவ விட்டு விட்டனர் எனவும் விமர்சனங்கள் செய்தவர்களும் உண்டு.

ஆனால், தென்னிலங்கையில் தற்பொழுது சில மாகாணசபைகளைக் கைப்பற்றியுள்ள எதிர்க்கட்சிகள் போடும் கூச்சலானது, மாகாணசபை அமைப்பானது எந்தளவிற்குப் பலவீனமானதாகவுள்ளன என்பதை அன்று புரிந்து கொள்ளத்தவறியவர்களுக்கும், புரிந்து கொள்ள மறுத்தவர்களுக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டாகும். அதாவது மாகாணசபைகளுக்கு எதுவித அதிகாரங்களும் இல்லை என்பதும், நிதிஒதுக்கீட்டென்பது மிகவும் குறைவானது என்பதும், அவற்றைப் பெற்றுக்கொள்ள எதிர்க்கட்சிகள் தற்பொழுது போராட்டம் நடத்தமுற்படுவதும் இதற்கான சான்றுகளாகும்.

எதிர்க்கட்சிகள் கூறுவது மட்டுமல்ல, அரசாங்கம் மாகாணசபைகள் குறித்துக் கொண்டுள்ள கொள்கையே மாகாணசபைகளின் பலவீனத்தை வெளிக்காட்டப்போதுமானதாகும். அண்மையில், ஹேவா கெட்டவில் கூட்டம் ஒன்றில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கா ''மாகாணசபைகள் பற்றிப் பேசுகையில் ''மாகாணசபைகளின் கடமை மத்திய அரசின் கொள்கைகளை அமுல்படுத்துவதே ஆகும். சில மாகாணசபைகள் எமக்குக் கிடைக்காது போனாலும் அரசின் தேசிய கொள்கைக்கு ஏற்ப செயற்பட வேண்டியது மாகாண சபைகளின் கடமையாகும். மாகாணசபைகள் இருப்பது அரசாங்கத்துடன் வழக்கு நடத்துவதற்கு அல்ல'' எனக் குறிப்பிட்டதில் இருந்தே மாகாணசபை குறித்து ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடும் அவர்களின் கணிப்பீட்டில், மாகாணசபையின் பங்கு பற்றியும் புரிந்து கொள்ளமுடியும்.

ஆனால், இம்மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட சிங்களப் பேரினவாதக்கட்சிகள் யாவும், இத்திட்டத்தின் மூலம் தமிழருக்கென இலங்கையில் ஒரு தனி அரசு உருவாகி விட்டதென கூச்சலிட்டவர்கள்தான். இந்நிலையில் தற்பொழுது இக்கட்சிகள் மாகாணசபையின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டிவந்தமை அவர்களின் கடந்தகால அரசியலில் தவறான கணிப்பீடுகளின் வெளிப்பாட்டின் விளைவே ஆகும்.

சிங்களஅரசியற்கட்சிகள் எப்பொழுதும்இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டே அரசியல் நடத்தி வந்தன. இந்நிலையில் அரசின் நடவடிக்கைகளை எப்பொழுதும் தமிழருக்கு எதிரானவை / சார்பானவை என்ற ரீதியில் நோக்கியே அவை பழக்கப்பட்டுப் போய்விட்டன. இதன் அடிப்படையிலேயே பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது தமிழருக்கு எதிரானது என்ற ரீதியில் ஆதரித்தன. மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட போது தமிழருக்குச் சாதகமானவை என எதிர்த்தன. ஆனால் இவ் இரு நடவடிக்கைகளும் சிங்கள மக்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பாதகமாக திரும்பியபோதே தற்பொழுது இது பற்றிக் கூக்குரல் இடத்தொடங்கியுள்ளன.

ஆனால், சிங்களப் பேரினவாதம்இதைத்தான் செய்யும் என்பதை விடுதலைப்புலிகள் தெளிவாகவே விளங்கியிருந்தமை தமிழ் மக்கள் மீண்டும்ஒரு முறை சிங்களத் தலைவர்கள்ஏமாற்றுவதைத் தவிர்த்தது. இதன்மூலம் தமிழர் விடுதலைப் போராட்டம் மீண்டும்பல வருடங்கள் பின் தள்ளப் படுவதுதடுத்து நிறுத்தப்பட்டது.

---

லாதன் வரவேற்புரையையும் தமிழீழ கல்விக்கழகத்தை சேர்ந்த வே. பாலகுமாரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்

கல்வி இணைப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு துரை இயாகராஜா தெரிவித்துள்ளார்.

சத்து ஐம்பதாயிரம் பாடசாலைப் பரீட்சார்த்திகள் அடங்குகின்றனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள்

வதற்கு அனுமதி தரும்படி யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கோரியுள்ளார். (சி) (ச)

சில முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் இத்தடை நீக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

---

**கருத்தரங்கு**

கருத்தரங்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நான்கு நாட்களும் சங்கீத ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். இந்துக்கல்லூரியில் மூன்று நாட்களும் நடன ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மூன்று நாட்களும் நடைபெறவுள்ளன.

அவ்வப்பாடத்திற்குரிய பயிலுனர் ஆசிரியர்கள் பயிற்சி நடைபெறும் நிலையத்திற்கு காலை 8.00 மணிக்கு சமுகமளிக்கும் படி கேட்கப்படுகின்றனர்.

---

**தென்னிலங்கையில்**

ணைத் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

---

**இ நகல்வி**

ள்ளனர்

இம் மாதம் 14ஆம் திகதியுடன் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கம் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்கின்றார். இதனை அடுத்து 15ஆம் திகதி மேற்படி இரண்டு கல்விப் பணிப்பாளர்களும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இதில் யாழ்ப்பாண வலயத்திற்கு முன்னர் வடகிழக்கு மாகாணசபையில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய செல்வி திலகவதி பெரியதம்பியும் வடமராட்சி வலயத்திற்கு முன்னர் கிளிநொச்சியில் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய கே கந்தசாமியுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடகிழக்கு மாகாண சபையினால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

---

**மீன்பிடிப்பதற்கான**

நடைமுறைப்படுத்தப்படும். எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடல்வலயச் சட்டத்தை முற்றாக நீக்க முடியாது. அதற்கான சூழ்நிலை இன்னமும் வரவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

மன்னார் பிரதேசத்தில் கடல்வலயச்சட்டம் தளர்த்தப்படலாம். ஆனால் முற்றாக நீக்கப்படமுடியாது என ஹமில்டன் வனசிங்கா கூறியுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா தெரிவித்தார்.

---

# இன்றைய நிலைகுறித்து தமிழர் பெருமைப்படலாம்

**- செல்லச்சாமி**

தமிழரைக் கண்டு பொலிசும் இராணுவமும் இன்று ஓடுகின்றது. இதுகுறித்து நாம் பெருமைப்பட வேண்டும் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

முன்னர் இராணுவத்தையோ பொலிசாரையோ கண்டவுடன் தமிழர்கள் ஓட்டமெடுத்தனர். ஆனால் இன்று அந்த இராணுவமும் பொலிசாரும் ஒரு தமிழனை கண்டாலே அவர் புலி என பீதி அடைகின்றனர். இது அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. இது பெரியதொரு விடயம் இதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழரின் உறுதியான ஆற்றல் அவர்களின் ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. அவ்வலிமை எம்மிடம் இருக்கும் வரை எந்த பலாத்காரத்திற்கோ அரசுக்கோ நாம் அஞ்ச வேண்டியதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

**ஜனாதிபதி**

இல்லை.

''விடுதலைப்புலிகளிடம் எனக்கு உள்ள நல்லெண்ணத் தொடர்புகளைப் பயன்படுத்தியும் அரசாங்கத்தில் நான் வகிக்கும் பங்கினையும் கருத்திற்கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுஒன்றைக்காண முன்வருமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு தெரிவித்தேன் அவர் அதனைக் கருத்தில் எடுத்து கொண்டதாக தெரியவில்லை. அவர் இராணுவ நடவடிக்கையிலேயே கண்ணும்கருத்துமாக இருக்கிறார். இதுகவலைதரும் விடயமாக உள்ளது'' என்றார்.

''நான் அரசாங்கத்தின் ஒரு அமைச்சராக இருந்தபோதும் எனது இனத்தின் உரிமைபற்றியும் தொழிலாளர் நலன் பற்றியும் கதைப்பதற்கு எனக்கு பூரணஉரிமை உண்டு இதனை யாரும் தவறாக நினைத்தாலும் அதற்கு நான் கவலைப்படப் போவதில்லை. வேண்டுமானால் எனது அமைச்சர் பதவியைப் பறிக்கட்டும். அதனை நான் மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன் இன்றைய நிலையில் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு நான் தலைமை தாங்கவேண்டிய நிலையும் ஏற்படலாம்'' என அமைச்சர் சௌ. தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

---

**தலைவர்**

துத் தலைவர்களும் கொலை செய்யப்படுவார்கள் எனவும் கட்சி பூண்டோடு அழிக்கப்படும் எனவும் இம்மிரட்டலின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கும் இராணுவத் தளபதிக்கும் கட்சி அறிவித்துள்ளது எனவும் கட்சி உறுப்பினர்களுக்கு ஏதாவது நடந்தால் முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என கட்சித் தலைவர் பேர்ணாட் சொய்சா கூறியுள்ளார்.

---

## மேஜர் கணேஸ் வீரவணக்க கூட்டம்

மேஜர் கணேஸின் ஏழாம் ஆண்டு வீரவணக்கக் கூட்டம் நேற்று முன் தினம் மாலை 5மணியளவில் அரியாலை லெப். செல்லக்கிளி அம்மான் வீடமைப்பு திட்டத்தில் திருமலை இடம்பெயர்ந்த மக்களால் நடத்தப்பட்டது.

தென் தமிழீழ தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திரு. கணேஷ் தலைமையில் நடைபெற்ற இவ் வீரவணக்கக் கூட்டத்தில் ஈகைச்சுடரை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகப் பொறுப்பாளர் பிரிது காந்த் ஏற்றிவைத்தார். மேஜர் கணேஸின் திருவுருவப் படத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தென் தமிழீழ சக வீடமைப்புத் திட்டங்களின் இணைப்பாளர் குட்டி மலர் மாலை அணிவித்தார்.

---

**தெரிவுக்குழு**

வேற்றாது தெரிவுக்குழு தனது தீர்வை வெளியிட உள்ளது. ஆனால், இவ் இரு மாகாணங்களும் இரு வெவ்வேறாக பிரிக்கப்பட்டாலும் அவையிரண்டுக்கும் பொதுவான ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம் என தெரிவுக்குழுசிபார்சுசெய்கிறது.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வசனவாக்கெடுப்பை அடுத்த ஜனவரியில் நடாத்திவிட அரசாங்கம் முயற்சி செய்கிறது. கிழக்கின்நிர்வாகத்தை நடத்த அரசு முயன்றாலும் அங்கு இராணுவ ஆட்சிதான் உள்ளது. வடக்கில் அரசாங்கத்தின் முழுமையான ஆட்சி இல்லை. கிழக்கில் பெருமளவு மக்கள் அகதிமுகாம்களில்தான் இருக்கிறார்கள். இந்நிலையில் சர்வசன வாக்கெடுப்பு நடாத்துவது வெற்றிகரமான ஒன்றாக இராது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

---

**தமிழீழ பொதுக் கல்வித்தேர்வு**

## விசேட பரீட்சைக்கான தேர்வு நிலைய மாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தோற்ற முடியாது போன அச்சுவேலி, புத்தூர், பளை, கொடிகாமம், வரணி உசன், சாவகச்சேரி, மட்டுவில் கொத்தணி பாடசாலை மாணவர்களுக்கு நாளை விசேட பரீட்சையில் தோற்ற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும், பாடரீதியாக பகுதி I, பகுதி II தோற்ற முடியாது போன மாணவர்களும், பாடப் பகுதித்தேர்வில் தோற்றலாம் எனவும், இவர்களுக்கு வரவு இடாப்பு மூலம் உறுதி செய்து தோற்ற அனுமதிப்பதுடன் அனுமதி அட்டைகள் தேர்வு நிலையத்தில் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்வு நிலையங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யா/ மட்டுவில் மகாவித்தியாலயம், யா/ சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்திலும்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு அப்பாடசாலை மண்டபத்திலும்,

சாவகச்சேரி றிபேக்கல்லூரியில் தோற்றிய மாணவர்களுக்கு அப்பாடசாலை மண்டபத்திலும்,

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் அப்பாடசாலை மாணவர்களுக்கும் உசன், வரணி, கொத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கும், மீசாலை வீரசிங்கம், விக்கினேஸ்வர வித்தியாலய மாணவர்களும்,

பளை மகாவித்தியாலயத்திலும், வேம்படு சேணி பாடசாலையிலும் தேர்வு நடைபெறவிருப்பதுடன், அச்சுவேலி புத்தூர் கொத்தணியில் விடுபட்ட மாணவர்களுக்கு புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1000 மெ. தொன் மாவுடன் ருமண வந்தடைந்தது

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவு மற்றும்பொருள்களுடன் புறப்பட்ட ருமண கப்பல் நேற்று நண்பகல் பருத்தித்துறையை வந்தடைந்தது.

இக் கப்பலில் 1000 மெற்றிக் தொன் மா, 700மெற்றிக் தொன் தனியாருக்கான பொருள்கள் என்பன எடுத்துவரப்பட்டன. தபால் பொதிகள் எதுவும் இக் கப்பலில் எடுத்து வரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

மேலும் இக் கப்பல் நேற்று உடன் காங்கேசன் துறை சென்றுவிட்டது. மீண்டும் பருத்தித்துறையில் பொருள்களை நாளை இக் கப்பல் இறக்குமென தெரியவருகின்றது.

இதற்கிடையில் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் 'வாதுவ', 'றுகுணு' கப்பல்கள் இன்று கொழும்பு நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 'வாதுவ' கப்பலில் யாழ். பிரதான தபாலகத்தினால் ஏற்றப்பட்ட 110 தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (யோ)

---

**ஜனநாயக**

உணவுப் பக்கற்றில்கூட தரகுப்பணம் அறவிடப்படுவது தற்போது தெரியவந்திருக்கிறது. கேள்விப்பத்திரம் எதுவும் கோராது இவ் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இவர் மில்லியன் கணக்கில் சம்பாதிக்கிறார்.

''இவை எல்லாம் இராணுவத்தினர் சகலருக்கும் தெரியும். அவர்களுக்கு இப்படியான ஒரு யுத்தம் தேவையில்லை. அவர்களுக்கு அவலச் சாவுகள் தேவையில்லை.

''உண்மையில் கிளாலியில் நடந்தது என்ன? சென்றார்கள். அங்கு இறந்தார்கள். உயிருடன் இருந்தவர்கள் மீண்டும் சென்றஇடம் திரும்பினார்கள். எந்த நன்மையும் இல்லாது இவ்வளவு உயிரிழப்பும் ஏன்? என சாதாரண மட்டத்திலுள்ள இராணுவத்தினருக்குப் புரியவில்லை'' இவ்வாறு பெற்றி வீரக்கோன் தெரிவித்தார்.

அவரின் இப்பேட்டி நேற்றிரவு 'சந்தேசிய' வானொலியில் ஒலிபரப்பாகியது.

மட்டு. கிராமங்களுக்கு

## உணவு எடுத்துச் செல்ல கடும் கட்டுப்பாடு

வாகரை, காயங்கேணி மாங்கேணி பகுதிகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதி மக்கள் இரண்டு கிலோ உணவுப் பொருளை எடுத்துச் செல்ல மட்டுமே அனுமதி வழங்கியுள்ளனர். மண்ணெண்ணெய் ஒருபோத்தலுக்கு மேல் மக்கள் பாவனைக்கு எடுத்துச் செல்ல முடியாது என கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

## கடத்தப்பட்டார்

(மட்டக்களப்பு)

கடந்த வாரம் ஓட்டமாவடியில் தியாவட்டவான் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத சிருடையினரால் கடத்தப்பட்டுள்ளார்.

சாமித்தம்பி வேதநாயகம் (28) என்பவரே கடத்தப்பட்டவர். இவர் ஒரு குழந்தையின் தந்தையாவார்.


# அல்டி - ALDI

## தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1-ம் திகதி முதல் நவம்பர் 12-ம் திகதி வரை

★ சகல விதமான கைக்கடிகாரங்கள்,

★ சுவர் மணிக்கூடுகள்

முதலியன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!

அல்டி

269/1 மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-7861)



விவசாயிகளே!

தொழிற்சாலை உரிமையாளர்களே!

இயந்திரப் பாவனையாளர்களே!

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்

பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான

குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது




உங்கள்

நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க

மின் பிறப்பாக்கியை இயக்க


# பொதுக்குழுவைக் கூட்ட கருணாநிதி அஞ்சுகிறார்

## - கோபாலசாமி தெரிவிப்பு

(பம்பாய்)

நான் இப்போதும் தி. மு. க உறுப்பினர்தான். என்னை வெளியேற்ற கட்சித் தலைமைக்கு அதிகாரம் இல்லை. அந்த அதிகாரத்தைஎல்லாம் கருணாநிதி இழந்து விட்டார். கட்சியின் பொதுக்குழுதான் இப்போது எல்லாவற்றையும் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு தி. மு.க. உறுப்பினர் வை கோபாலசாமி பம்பாயிலிருந்து வெளி வரும் 'சண்டே ஒ சேவர்' என்ற ஆங்கிலப்பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில்அவர் மேலும் தெரிவிக்கையில்;

கலைஞர் மிகவும் தைரியசாலி ஆனால் பொதுக்குழுவைக் கூட்டினால் எனக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி அந்தக் கூட்டத்தின்மூலம் வெளிப்பட்டுவிடும் என்பது அவருக்குத் தெரியும். எனவேதான்பொதுக்குழுவைக் கூட்ட அவர் பயப்படுகிறார்.

என்னை தி. மு. கவிலிருந்து நீக்கவே இவ்வளவு சம்பவங்களும் நடக்கின்றன. நான் இல்லாமலேயே கட்சியை நடத்துவதற்கு தலைமை முடிவு செய்து விட்டது. என்னை வெளியேற்றுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் கட்சித் தலைமை எடுத்து விட்டது. ஆனால் தி.மு.க.தொண்டர்கள் அனைவரும் கடுமையாக இதை எதிர்க்கின்றனர். எனவே என்னை வெளியேற்ற வேறு வகையான தந்திரத்தை கட்சித் தலைமை கையாளுகிறது

கருணாநிதியின் செல்லப் பிள்ளையாக நீங்கள் இருந்தீர்கள். திடீர்என்றுஎன்னநடந்து விட்டது? என்ற கேள்விக்கு

கலைஞரின் விசுவாசத் தொண்டனாகத்தான் நான் இருந்தேன். சமீபகாலமாக அவர் என்மீது வெறுப்புக் கொள்ளத் தொடங்கினார். எனினும் அவர் மீதுள்ள விசுவாசத்தை நான் குறைத்துக் கொள்ளவில்லை எனப் பதிலளித்தார்.

சமரச முயற்சியை நீங்கள் ஏன் ஏற்கவில்லை? என்ற கேள்விக்கு-

சமரசத்திற்கு என்னதேவை உள்ளது? தவறு செய்தது யார் என்பதை கட்சியின் பொதுக்குழுகூடி முடிவுசெய்ய வேண்டும். அனைவருமே கட்சி விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் தான். தலைவருக்கும் தொண்டருக்கும் ஒரே மாதிரியான விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டும். ஆனால் அவ்றாறு பின்பற்றப்படுவதில்லைஎன பதிலிறுத்தார்.

நீங்கள் தனிக்கட்சி தொடங்குவீர்கள் என்று இதற்கு அர்த்தமா? என்ற கேள்விக்கு-

இல்லை. இப்போதும் நான் தி. மு. க. உறுப்பினர்தான். அக்டோபர் 3ஆம் திகதி வரை கருணாநிதியை எனது ஒரே தலைவராக கூறி வந்தேன். நான் துரோகி என்று என்மீது முத்திரைகுத்த அவர்முயற்சித்தார். இந் நிலையில் எந்த அடிப்படையில் நான் அவரின் கீழ் பணியாற்ற முடியும்? என கோபாலசாமி பதில் கேள்வி எழுப்பினார்.


## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 06-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11539

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26 0525, 26-6398 28-9259, 42-7975, 27-7740
40 1516, 26 8789, 26 3528, 24 0416, 41 8557,
28-4672, 26-0032, 41-8292, 43 4065, 28-1686,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5877, 42 3993, 42-0849, 27-0802, 28-6546,
26-3294, 42-2862, 27-9779, 27 7717, 27-90[illegible]3,
26-5576, 26-3321, 27-8160, 24-6431, 26-6320,
27-9416, 24-5137.



யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

The Super Cops

[கராட்டி]

தினசரி பிற்பகல் 4-00 மணி, மாலை 6-00 மணி

சனி, ஞாயிறு காலை 10-30, பிற்பகல் 2-30, 4-00, மாலை 6.00 மணி


## வங்கி ஊழியர் பரீட்சை

(நமது நிருபர்)

இலங்கை வங்கி ஊழியர்களுக்கான இடை நிலை இறுதித் தேர்விற்கான வினாத்தாள்கள் வந்துள்ளன.

நேற்று பருத்தித் துறை துறைமுகத்திற்கு வந்த குமண கப்பலிலேயே இவ் வினாத்தாள்கள் எடுத்து வரப்பட்டன மேற்படி பரீட்சை இம்மாதம் இறுதியில் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது.

(சி, க)

## 50 அடி நீளமான மீன் கரையொதுங்கியது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் கடற்கரைப் பகுதியில் திமிங்கில இனத்தைச் சேர்ந்த பெரிய மீன் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. கரை ஒதுங்கிய இம் மீன் சுமார் 50 அடி நீளமானதாகும் இம்மீன் இறந்த நிலையிலேயே கரையொதுங்கியுள்ளது.

[யோ]

## கல்வி அபிவிருத்தி ஆய்வில் பல்கலைக் கழகம் ஈடுபடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மேற்கொள்ளவுள்ளார்.

குறிப்பாக 1988 ஆம் ஆண்டில் இருந்து 1992ஆம் ஆண்டு வரையிலான 5ஆண்டு காலப் பகுதியில் பாடசாலைகளின் வெவ்வேறுபட்ட மாற்றங்களையும் அதனால்க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களின் நிலைபற்றிய தரவுகளையும் யாழ்.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த பாடசாலைகள் உள்ளிட்ட 75 பாடசாலைகள் இவ் ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறான ஆய்வு மூலம் எதிர்காலத்தில் மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் பற்றியும், இடம் பெயர்ந்த பாடசாலை, மற்றும் மாணவர்களின் நிலை பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## கிழக்கில் தேர்தல்; மு.ஸ், காங்கிரஸ் தயார்!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் என அதன் பாராளுமன்ற உறுப்பினர் கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம் பெற்ற இக் கட்சியின் மாநாட்டின்போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போட்டியிடுவோரின் வேட்பாளர் பட்டியல் சில தினங்களில் வெளியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மண்ணெய் இறக்கியவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறையில் 'றுகுணு' கப்பலில் மண்ணெண்ணெய் பரல் இறக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பலாலியைச் சேர்ந்த தொழிலாளர்ந்த இவர் திடீரென மயங்கி விழுந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் நேற்று பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவர் பின்னர்




உங்கள்

நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க

மின் பிறப்பாக்கியை இயக்க

ஆக்கிவாயு பிறப்பாக்கி

மரக்கரி அல்லது சிரட்டைக்கரி மட்டுமே

கொண்டு சக்தியைத் தரவல்லதுதான்

## இரகசியம் ஒன்றுமில்லை.

ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தி தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லது இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் இயந்திரங்களை இயக்கவல்ல ஆக்கிவாயுவை உற்பத்தி செய்கின்றன

(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும். முதற்கட்டமாக வூல்சிலி (Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக்கொள்ளலாம்.

பொருத்தவேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

எல்லாநாட்களிலும் காலை 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

எமது அலுவலகம்

சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி.

(சி-7859)

---

26 0520, 26-6398 28-9259, 42 7975, 27-7740
40 1516, 26 8789, 26 3528, 24 0416, 41 8557,
28-4672, 26-0032, 41 8292, 43 4065, 28-1686.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5877, 42 3993, 42-0849, 27-0802, 28-6546,
26-3294, 42-2862, 27-9779, 27 7717, 27-90?3,
26-5576, 26-3321, 27 8160, 24-6431, 26-6320,
27-9416, 24-5137.

---

## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

## The Super Cops

[கராட்டி]

தினசரி பிற்பகல் 4-00 மணி, மாலை 6-00 மணி
சனி, ஞாயிறு காலை 10-30, பிற்பகல் 2-30, 4-00, மாலை 6.00 மணி

கராட்டி திரைப்பட வரிசையில் மற்றுமோர் திரைவிருந்து

(சி-7852)

---

## கேள்வி அறிவித்தல்

யாழ் செயலக தேவைக்கான

### தளபாடங்கள் செய்து வழங்குதல்

மேற்படி வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. இவ்வேலை சம்பந்தமான முழு விபரங்களும் இச் செயலகத்தில் களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
2. அரசாங்கத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கலாம்.
3. கேள்விப்படிவங்கள் மீளளிக்கப்படும் கட்டுப்பணமாக ரூபா 250/- செலுத்தி யாழ். அரசாங்க அதிபரிடமிருந்து 1993 - 11 - 08ஆம் திகதி தொடக்கம் 1993-11-12ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 10. 00 மணி தொடக்கம் பி. ப. 2. 00மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் யாழ். அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையாளர்செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு 19-11-1993 ஆம் திகதி முற்பகல் 11. 00 மணிக்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாகஅல்லது அதற்கென இச்செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும். கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர் பத்திரம் அடங்கிய தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

க. மாணிக்கவ சகர்
அரச அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
05-11-1993

(சி/7865)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

சாதாரண மற்றும் உயர்தர ... தெரிவிக்கப்படுகிறது. (05)

## கிழக்கில் தேர்தல்; மு.ஸ். காங்கிரஸ் தயார்!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் என அதன் பாராளுமன்ற உறுப்பினர் கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம் பெற்ற இக் கட்சியின் மாநாட்டின்போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போட்டியிடுவோரின் வேட்பாளர் பட்டியல் சில தினங்களில் வெளியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மண்ணெய் இறக்கியவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறையில் 'றுகுணு' கப்பலில் மண்ணெண்ணெய் பரல் இறக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பலாலியைச் சேர்ந்த தொழிலாளர் ஒருவர் மயங்கி விழுநது மரணமானார்.

பலமணிநேரமாக கடலில் பரல்கள் இறக்கிக் கொண்டிருந்த இவர் திடீரென மயங்கி விழுந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் நேற்று பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவர் பின்னர் அங்கு மரணமானார். ந.புஸ்பராஜா என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (யோ)

## மன்னாரில் கைதாகிய பலர் பற்றி தகவலில்லை

(கொழும்பு)

மன்னார் தபால் அலுவலக உத்தியோகத்தர் உட்பட பல தமிழர் மன்னார்த் தீவுப்பகுதியில் சமீபகாலத்தில் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டுள்ள இவர்கள் குறித்து எதுவித தகவல்களும் வெளிவருவதில்லை என அறியப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் 7-ம் திகதி மட்டும் மூன்றுபேர் காணாமல் போயுள்ளனர். பேசாலையிலிருந்து மன்னார் நகரத்தை நோக்கி சென்று கொண்டிருந்தபோது இம் மூவரும் பி. எம் சீ. பொலிஸ் பரிசோதனை நிலையத்தில் இறக்கப்பட்டனர். இவர்கள் பற்றி இதுவரை தகவல்கள் வெளிவரவில்லை.

உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த ராஜா என்பவரும், திருக்கோணமலை குச்சவெளி இளையதம்பி சித்திலிங்கம் என்பவரும், திருக்கோணமலை கும்புறுப்பிட்டி பகுதி ஆறுமுகம் அரசரத்தினம் என்பவரும், தலைமன்னார் கட்டுக்காரன் குடியிருப்பைச் சேர்ந்த அருளானந்தம் என்பவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

மன்னார் தபால் அலுவலக உத்தியோகத்தர் பிரதீபன் செப்டெம்பர் 20ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

மன்னார்த்தீவு பகுதியில் இராணுவத்தினருடனும், பொலிசாருடனும் சேர்ந்து ரெலோ குழுவினரும் செயற்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

---

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனிமுத்து திரேசம்மா

சில்லாலையை பிறப்பிடமாகவும் தற்போது நவாலியில் வசித்தவருமான அந்தோனிமுத்து திரேசம்மா காலமானார் இவர் காலஞ்சென்ற அந்தோனிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மேரியோசவ், சவுந்தரநாயகம் (லோகா), எற்வேட்பங்கிராஸ், மேரிமாகிறேற், தியோனிஸ், இம்மனுவேல் (கொழும்பு), றெஜீனா (வவுனியா), சுகிர்தம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். றெஜினா (கொழும்பு), மேரிறீற்றா [கொழும்பு], யசிந்தா புஸ்பராணி, மேரியோசவ், நிர்மலா, சறோஜினி, மரியதாஸ், கோபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியை இன்று 07. 11. 93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சாளி வீதி நவாலி தெறகு இல்லத்தில் நடைபெற்று புனித பீற்றர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

சாளி வீதி,
நவாலி தெற்கு.

(6516)

தகவல்:
மேரியோசவ்